NP

| | |
|---|---|
| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| திருமதி.க.சசிகலா<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை – 600 006. | அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்,<br>அனைத்து மாவட்டங்கள். |

**ந.க.எண். 013061 / பி1 /2025** **நாள். 29.12.2025**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – 2025 – 2026–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு – பள்ளி மாணாக்கரின் விவரங்களை பதிவேற்றம் செய்தல், தேர்வுக்கட்டணம், TML கட்டணம் செலுத்துவதற்கு கூடுதல் கால அவகாசம் வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை :** 1.அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள்:31.10.2025

2.இவ்வலுவலக இதே எண்ணிட்டக் கடிதம் நாள்.19.11.2025, 27.11.2025 மற்றும் 16.12.2025

------

பார்வை 1–ல் காணும் இவ்வலுவலகச் செயல்முறைகளில், 2025–2026–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் தங்கள் பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களது விவரங்களை 31.10.2025 **முதல்** 19.11.2025 வரையிலான நாட்களில் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது.

பார்வை 2–ல் காணும் இவ்வலுவலகக் கடிதங்களில், **பத்தாம் வகுப்பு மாணாக்கரின் விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்வதற்கு 05.12.2025 வரையும், 17.12.2025 முதல் 19.12.2025 வரை கூடுதலாக கால அவகாசம் வழங்கப்பட்டது.**

தற்பொழுது, புதியதாக பதிவு செய்த மற்றும் ஏற்கனவே பதிவு செய்துள்ள சில பள்ளிகள் பெயர்ப்பட்டியல் தயாரிப்பு பணிகளை முடித்திடாதக் காரணங்களால், பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பணிக்காக இறுதி வாய்ப்பாக, மாணாக்கரின் விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்வதற்கு **30.12.2025 முதல் 05.01.2026 வரை** கூடுதலாக கால அவகாசம் வழங்கப்படுகிறது.

தற்போது, அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட User Id மற்றும் Password–ஐ பயன்படுத்தி **Pulled but not applied school list** என்ற Report–ஐ பதிவிறக்கம் செய்து பட்டியலில் தங்கள் ஆளுகைக்குட்பட்ட பள்ளிகள் ஏதேனும் பெயர்ப்பட்டியலில் மாணவர்களின் விவரங்களை Pull செய்து Apply செய்யாத பள்ளிகளின் தலைமையாசியர்கள் / முதல்வர்களைத் தொடர்புகொண்டு மேற்காண் பணியினை விரைந்து முடித்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், **In EMIS 10th Class School not pull in DGE site School List** என்பதை பதிவிறக்கம் செய்து தங்கள் ஆளுகைக்குட்பட்ட பள்ளிகள் ஏதேனும் பெயர்ப்பட்டியல் தயாரிக்காமல் விடுபட்டிருப்பின் அத்தகைய பள்ளித்தலைமையாசியர்கள் / முதல்வர்களைத் தொடர்புகொண்டு மேற்காண் நாட்களில் பணியினை விரைந்து முடித்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

**ஒம்/–**
**இயக்குநர்**

**<u>நகல்:</u>**

1. மாநில திட்ட இயக்குநர்,ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககம்
   –தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம்.
3. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம்.
   – தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
4. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
5. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை/தனியார் பள்ளிகள்)